எல்லாப் பிரச்சினைகளையும் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) இது முடியட்டும். திரு. எஸ்.ஆர். பி. அவர்களைக் கூப்பிட்டுவிட்டேன். அவர் முடிக்கட்டும்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள், திரு. ஆஸ்டின்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 9 முதல் 13 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

முற்பகல் 11-25

***திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் இந்தப் பேரவைக்கு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குண்டான வாய்ப்பினை அளித்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் குலதெய்வமான அம்மா அவர்களுக்கு எங்களுடைய குடும்பத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் முதலில் இந்தத் தருணத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதிவாழ் மக்கள் அதிக வாக்குகளை அளித்து என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ததற்கு என்னுடைய தொகுதிவாழ் மக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னை பொது நிறுவனங்கள் குழுத் தலைவராக நியமனம் செய்து பணியாற்றிட எனக்கு ஓர் அரிய வாய்ப்பினை அளித்தமைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்று முதல் ஆறு வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.